# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 7 | நாள் | : 22.04.2025 |
| அசல் வழக்கு எண். | 8/2024 | | |
| பெயர் | முத்துசாமி | த/பெ | தங்கசாமி |
| வயது | 49 | தொழில் | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (Senior Revenue Inspector) |
| கிராமம் | | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை:**

வருவாய் கோட்டாட்சியர் மயிலாடுதுறை அவர்களுக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து 17.04.2025 அன்று சாட்சியமளிக்க சம்மன் வந்தது அவர் என்னை இந்த வழக்கில் சாட்சியமளிக்க பணித்து அதிகார கடிதம் வழங்கியுள்ளார் நான் 17.04.2025 அன்று இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வர கால அவகாசம் கோரியிருந்தேன். கச்சேரி சாலையில் இருந்த பழைய வருவாய் கோட்ட அலுவலகம் பட்டமங்கலம் தெருவில் உள்ள அலுவலகத்திற்கு தற்காலிகமாக மாறியுள்ளது. அதனால் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்படாமல் இருப்பதால் சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வர முடியவில்லை. மீண்டும் கால அவகாசம் வேண்டும். சாட்சி 25.04.2025 வரை கால அவகாசம் கோரியதால் மீண்டும் கடைசிமுறையாக காலஅவகாசம் வழங்கப்படுகிறது.

22/04/2025

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

22/4/25

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

பி.வா.சா. 6

நாள் : 22.04.2025

அசல் வழக்கு எண். 8/2024

பெயர் சிவக்குமார் த/பெ அய்யாவு

வயது 42 தொழில் காவல் ஆய்வாளர்

கிராமம் மயிலாடுதுறை தாலூக்கா மயிலாடுதுறை

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க 17.04.2025 தேதியிட்ட சம்மன் வந்தது. அன்றைய தினம் மயிலாடுதுறை கொத்த தெருவில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தற்போது எடுத்து வந்துள்ளேன். மயிலாடுதுறை கச்சேரி ரோட்டில் உள்ள லட்சுமி விலாஸ் காம்பளக்ஸ் மற்றும் அதனை சார்ந்த கடைகள் சம்பந்தமாக வாதி இந்திராணி, மற்றும் பிரதிவாதி ராஜராஜேஸ்வரி ஆகியோருக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு பலமுறை எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. வாதி பிரதிவாதி வகையறா பெயரில் எட்டு முதல் தகவல் அறிக்கை மயிலாடுதுறை காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது. அந்த எட்டு **முதல் தகவல் அறிக்கை சான்று நகல் Ex.X1 வரிசை** ஆகும். நான் இது சம்பந்தமாக குவிமுச 107 பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கும்படி உட்கோட்ட நிர்வாக நடுவர் (RDO) அவர்களுக்கு 01.05.2022 அன்று கடிதம் அனுப்பியுள்ளேன். அந்த **கடித சான்று நகல் Ex. X2** ஆகும்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

மயிலாடதுறை காவல் நிலைய குற்ற எண். 1231/2020 சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். அந்த முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் மயிலாடுதுறை SSI ராஜாராம் வர்மா என்றால் சரி. அந்த முதல் தகலவ் அறிக்கையில் எதிரிகள் ராஜராஜேஸ்வரி, வெங்கட்ராஜலு, வழக்கறிஞர் சங்கமித்ரன் ஆகியோரும் மற்றும் ஒரு 16 பேரும் என்றால் சரி மொத்தம் 19 எதிரிகள் அந்த முதல் தகவல் அறிக்கையில். மயிலாடுதுறை கச்சேரி ரோட்டில் உள்ள லட்சுமி விலாஸ் காம்ப்ளக்ஸ் மற்றும் அதனை சார்ந்த கடைகள் சம்பந்தமாக சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தியதால் அந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. காவல் நிலையத்திற்கு முன்பாக தர்ணா போராட்டம் நடத்தியதால் அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்களா என்றால் அனைவரையும் கைது செய்யவில்லை. ராஜராஜேஸ்வரி, வெங்கட்ராஜலு, வழக்கறிஞர் சங்கமித்ரன், வழக்கறிஞர் கோபிநாத் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள் என்றால் சரி. மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 5/2023 மயிலாடுதுறை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரி. அதில் புகார்தாரர் கோபாலக்கிருஷ்ணன் மனைவி ஜெயந்தி என்றால் சரி. அதன் **சான்று நகல் Ex.X3** ஆகும். அந்த புகாரில் ராஜராஜஸ்வரி கச்சேரி ரோட்டில் உள்ள ஸ்ரீலட்சுமி விலாஸ் Tool கடையை தன்னிச்சையாக திறந்துவிட்டதாகவும் வழக்கு நிலுவையில் உள்ளது என்று பூட்ட சொன்னபோது ஜெயந்தியையும் கோபாலக்கிருஷ்ணனையும் ராஜராஜஸ்வரி அடித்து விட்டதாக புகார் என்றால் சரி. அந்த வழக்கு

Jeam

இன்னும் நிலுவையில் உள்ளது என்றால் சரி. குற்ற எண். 58/2024 என்ற வழக்கும் எங்கள் காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரி. அதில் புகார்தாரர் இந்திராணி என்றால் சரி. ராஜராஜேஸ்வரி, வெங்கட்ராஜலு ஆகியோர் கச்சேரி ரோட்டில் உள்ள கடையில் இருந்து பொருட்களை திருடிச்சென்றுவிட்டதாக புகார் என்றாலும் அந்த வழக்கும் எங்கள் காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரி. **அதன் சான்று நகல் Ex.X4** ஆகும். இதுபோல் இருதரப்பினரும் பத்திற்கும் மேற்பட்ட புகார்கள் கொடுத்து நிலுவையில் இருப்பதால் குவிமுச 107 பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கும்படி உட்கோட்ட நிர்வாக நடுவர் (RDO) அவர்களுக்கு 01.05.2022 அன்று கடிதம் அனுப்பினேன் என்றால் சரி. அந்த 107 proceedings ல் A தரப்பினர் ராஜராஜேஸ்வரி, வெங்கட் என்ற வெங்கட்ராஜலு என்றாலும் B தரப்பினர் இந்திராணி, கோபாலக்கிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் என்றால் சரி. A தரப்பினர் ராஜராஜேஸ்வரி, வெங்கட் என்ற வெங்கட்ராஜலு இருவருக்குமிடையே என்ன உறவு என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. 107 proceedings ல் A தரப்பினர் ஆஜராகவில்லை என்றாலும் B தரப்பினர்கள் ஆஜரானார்கள் என்றாலும் அதுபற்றிய குறிப்பு எதுவும் உள்ளதா என்றால் என்னிடம் உள்ள வழக்கு கோப்பில் அது பற்றிய குறிப்பு இல்லை. 107 proceedings ல் யார் ஆஜரானார்கள் யார் ஆஜராகவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரி. 107 Proceedings க்காக A தரப்பினர் ஆஜராகவில்லை என்றாலும் B தரப்பினர்கள் ஆஜரானார்கள் என்றாலும் அதனால் B தரப்பினர்கள் எந்தவிதமான சட்டம் ஒழுங்கு பிரச்சனையிலும் ஈடுபடவில்லை என்று B தரப்பினருக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. அதற்கான

ஆவணம் காவல்நிலைய வழக்கு கோப்பில் இல்லை. 107 Proceedings முடிந்தபிறகும் கச்சேரிரோட்டில் உள்ள சொத்து பூட்டப்பட்ட நிலையில் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மயிலாடுதுறை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் உத்தரவுப்படிதான் திறந்துவிடப்பட்டது என்றால் சரி. அது DVC வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு சொத்தின் உரிமைகளை நிர்ணயம் செய்யக்கூடிய உத்தரவு இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. DVC வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை போலிஸ் உதவியுடன் பிரதிவாதிகள் தனக்கு சாதகமாக செயல்படுத்திகொண்டார்கள் என்றால் சரியல்ல. வாதிகளின் பாகவீத சொத்தையும் அவர்கள் அனுபவித்து கொண்டார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

22/4/25